
# இலக்கியப் பதிவுகளில் மதுரை

## கூடல் (தொகுதி - 1)





வெளியீடு:

தமிழ்த்துறை

ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)

மதுரை-625 002.

**இலக்கிய பதிவுகளில் மதுரை**
**( Imprints of Madurai in Literature)**
**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**
**25, 26 பிப்ரவரி 2016**
**கூடல்**

**தொகுதி – I**

**பதிப்பாசிரியர்கள்**

**முனைவர் சு. சந்திரா**
**செல்வி. இரா. கவிதா**
**முனைவர் த. சுதந்திரமணி**

©உரிமை : ஆசிரியருக்கு

முதல் பதிப்பு : பிப்ரவரி, 2016

வெளியீடு:

**பாவை பப்ளிகேஷன்ஸ்**
#16(142), ஜானி ஜான்கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
☎: 044-28482441, 42155309
email : pavai123@yahoo.com

ISBN : 978 - 81 - 7735 - 850 -6

Code No: P 1392

பக்கங்கள் : 24+648 =672

**விலை: ரூ. 900.00**
**(இரு தொகுதிகள்)**

அச்சிட்டோர்:

**பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,**
#16(142), ஜானி ஜான்கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

**Branches**

**Ambattur** (H.O) 044 - 26359906, 26258410, 26251968 **Spencer Plaza** 044 - 28490027 **Trichy** 0431 - 2700885 **Tanjore** 04362 - 231371, **Tirunelveli** 0462 2323990 **Madurai** 0452 - 2344106, 2350271, **Dindigul** 0451 - 2432172, **Coimbatore** 0422 - 2380554 **Salem** 0427 - 2450817 **Hosur** 04344 - 245726, **Ooty** 0423 - 2441743 **Vellore** 0416 - 2234495 **Thiruvannamalai** 04175 - 223449 **Villupuram** 04146 - 227800 **Pondicherry** 0413 - 2213101

15. திருவாவடுதுறை ஆதீனம் - மதுரைக் கிளைமடம் 110
*S. ARUNA PRIYADHARSHN*

16. மதுரைக்காஞ்சியில் மதுரை 116
**கோ.பாலாஜி**

17. "பாண்டி மாதேவி" வலம் வந்த கோலமா மதுரை 122
**முனைவர். கீ.பியூலா**

18. மதுரை வாழ் சௌராஷ்ட்ரா
சமூக இலக்கிய கர்த்தாக்கள் 129
**முனைவர். எஸ்.ஆர்.தேவிகா**

19. காஞ்சி காட்டும் மதுரையின் புற-அக நகர்த் தோற்றம் 133
**செ.ஸ்ரீதேவி காமாட்சி**

20. இலக்கியங்களில் மதுரை 138
**பி.தனலெட்சுமி**

21. மதுரை- காரணப்பெயரா? 144
**முனைவர் இரா. டயானாகிறிஸ்டி**

22. பாண்டியநாட்டு வளங்களில் மலையும்,
துறை முகங்களும் 150
**முனைவர். இரா. மணிமேகலை**

23. தென்னிந்திய கல்வெட்டுகளில் மதுரை
பற்றிய பதிவுகள் : ஓர் பார்வை 154
**முனைவர் இரா. அன்பழகன்**

24. மதுரையில் ஆன்மீக வளர்ச்சியில்
வேதாத்திரி மகரிஷியின் ஆன்மீக மையம் 159
**ம.ச.அங்கயற்கண்ணி**

25. மதுரைக்காஞ்சி புலப்படுத்தும் மதுரையின்
ஐந்திணை வளங்கள் 166
**லீ. பெலிண்டா**

26. இலக்கியங்களில் மதுரை 170
**க.பிரியங்கா**

27. மா மதுரை 178
**க.ரேவதி**

28. மதுரைக் கலம்பகம் காட்டும்
மதுரையின் தொன்மையும் வளமையும் 183
**முனைவர் (திருமதி) சௌ.கீதா**

# மா மதுரை

*க.ரேவதி,*
உதவிப்பேராசிரியர்,
பாத்திமா கல்லூரி,

**முன்னுரை:**

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து வாளோடு முன் தோன்றிய மூத்தகுடி நம் தமிழ்க்குடி என்பது தமிழர்களுக்குப் பெருமை. கல்வெட்டு, செப்பேடு, அகழ்வாராய்ச்சி, கவின்மிகு கலைகள், இலக்கியங்கள் என எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்திருக்கும் மதுரை குறித்த பதிவுகள் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த நம் மதுரைக்குப் பெருமை. கல்வெட்டுக்களும், சங்க இலக்கியங்களும் குறிப்பிடும் 'மாமதுரை'யின் வளமிகு சிந்தனைகளைச் சுட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கல்வெட்டுக்களில் கவின்மிகு மதுரை:**

எண்பெருங் குன்றங்களால் சூழப்பட்ட மதுரை மூதூரில் எண்ணற்ற கல்வெட்டுக்கள் கிடைத்த வண்ணம் உள்ளன. நாகரிகம் வளரத் தொடங்கிய காலத்திலேயே மதுரை மண்ணில் மற்றவர்களின் இன்னலைப் போக்கும் எண்ணம் மக்களிடையே இருந்துள்ளது. மாங்குளம் அருகே கிடைத்துள்ள கல்வெட்டுச் செய்தி

**"கணிய் நந்தஅ ஸிரிய்இ குவ் அனேதம்மம் இத்தாஅ
நெடுஞ்செழியன் பண அன் கடல்அன் வழுத்திப்
கொட்டு பித்தஅ பளிஇய்"** (மாமதுரை – ப.160)

என அமைந்துள்ளது. இக்கல்வெட்டு தமிழகத்தில் கிடைத்துள்ள மிகப் பழமையான தமிழ்பிராமி கல்வெட்டு என தொல்லியல் அறிஞர்கள் மதிப்பிட்டுள்ளனர். நெடுஞ்செழியனின் அலுவலன் கடலன்வழுதி கணிநந்த ஸ்ரீகுவனுக்கு உருவாக்கிய பள்ளி இது என்பதே செய்தி. சமணர்கள் மற்றும் வணிகர்கள் இளைப்பாறுவதற்காக மலை (கற்பாறை மிகுந்த) களிலே காடி வெட்டியுள்ளனர்,



கற்படுக்கைகளை அமைத்துள்ளனர். இன்றளவும் கனமழை, கத்திரி வெயிலின் தாக்கம் இங்கே இல்லை. கீழக்குயில்குடி சமணப்பள்ளியை இதற்குச் சான்றாகச் சுட்டலாம். 'காடு கொன்று நாடாக்குவதன் முன்னர்' மதுரைத் தமிழன் தன்னையொத்த வழிப்போக்கன், வணிகன், துறவிகள் என அனைவருக்கும் மழையின் பொருட்டும் வெயிலின் பொருட்டும் பாதிப்பு ஏற்படாவண்ணம் தண்ணளி செய்துள்ளனர். கடப்பதற்கு அரிய வழிகளில் இளைப்பாற இடமளித்துள்ளனர்.

**வீரத்தின் விளைநிலம்:**

புலிமான்கோம்பையில் காலத்தால் மிகவும் தொன்மையான நடுகல் கிடைத்துள்ளது. கூடலூரில் நடைபெற்ற ஆகோள் பூசலில் இறந்துபட்ட தீயன் அந்தவன் என்ற வீரனின் நினைவாக இக்கல் எடுக்கப்பட்டுள்ளது.

**'கல்
பேடு தீயன் அந்தவன்
கூடல்ஊர் ஆகோள்'** (மாமதுரை – ப.23)

ஆகோள் பூசலில் இறந்த வீரனின் வீரம் போற்றப்பட்டுள்ளது. அடுதலும் தொலைதலும் உலகத்து இயற்கை என்றாலும் வீரன் இறந்த பின்னும் அவனது பெருமை உலகிற்கு உணர்த்தப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது. இன்றும் இந்தியாவில் வீரதீரச் செயல்களுக்காக **'பரம்வீரசக்ரா'** விருது வழங்கப்பட்டு வருவதை நாம்அறிவோம். வீரனின் பெருமையினை அடுத்து வரும் தலைமுறைக்கு எடுத்துச் செல்வதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவன் மதுரைத் தமிழன் என்பதில் ஐயமில்லை. வீரத்தின் விளைநிலமாக இம்மண் என்றும் திகழும் என்பதற்கு இதுவே சான்றாகும்.

**தமிழின் வளம்:**

சங்கம் வைத்துத் தமிழை வளர்த்த பெருமை மதுரை மாநகரையே சாரும். இடைக்கால, பிற்காலப் பாண்டியர்களின் மெய்க்கீர்த்திகளில் முத்தமிழும், ஒருமூன்று தமிழும், மூவகைத் தமிழும், இயலிசை நாடகம் எழில் பெற வளர... என பாண்டிய மன்னர்கள் முத்தமிழை வளர்த்த நிகழ்வுகள் பதிவுசெய்யப் பட்டுள்ளன.

**'மகாபாரதம் தமிழ்ப் படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்'**
**(இராஜசிம்மனின் சின்னமனூர்ப் பெரிய செப்பேடு, மெய்க்கீர்த்திகள் - ப.206)**



பாவை

பாவை பப்ளிகேஷன்ஸ்
# 16 (142) ஜானி ஜான்கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 044 - 28482441, 42155309.
e-mail : pavai123@yahoo.com

ISBN 817735850-2
9788177358506

Code No : P 1392
Rs : 900/-